[5th November 1966

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, பாக்கியுள்ள பள்ளிகளுக்கு எப்போது அந்த கிராண்ட் அளிக்கப்படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்து யூனியன்கள் பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதாக இருந்தால், பஞ்சாயத்து யூனியனின் நிதி நிலைமை அனுமதிக்குமா என்று பார்க்கவேண்டும். அதைப் பார்த்து மேலும் இரண்டாயிரத்தி ஐந்நூறு ரூபாய் பஞ்சாயத்து மூலமாகவோ அல்லது பொது மக்கள் மூலமாகவோ பெற முடியுமா என்று பார்க்கவேண்டும். அதையெல்லாம் பார்த்துத் தான் அதற்கு மேல் 12,500 ரூபாய் அதற்கு ஈடாக அரசாங்கம் கொடுத்து வருகிறது.

* 423 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether orders have been issued for the taking over by the Government of the High Schools that were classified as Board High Schools ; and

(b) whether the staff working in those schools have been absorbed as Government employees?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) No. The matter is under examination.

Basic trained teachers

* 424 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have any proposal to conduct Public Examinations during the months of September for failed Basic Trained Teachers also just as it is conducted for non-basic teachers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பரீட்சையில் தேருதவர்கள் தற்போது அந்த பயிற்சி பள்ளியில் சேர்ந்து படிக்க வசதி இருக்கிறதா ? இல்லையென்ருல் வசதி செய்து கொடுப்பதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இப்போது, பரீட்சையில் தேருத ஆசிரியர்கள் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஸ்தானத்திலே வேலை செய்வதற்கு ஏதேனும் தடை இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றியும் தனிக்கேள்வி வேண்டும்.